Registered as a Newspap /

* தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்,
* குறைந்த செலவில்
பெற்றுக்கொள்ள
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 28628

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

எழில்மிகு இயற்கைக் காட்சிகளை
வர்ண புகைப்படத்தில் தந்திடும், தரமான
Sakura - Fuji - Kodak
வர்ணப் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 28628

மலர் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ சித்திரை மீ 3 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 6 (16-04-1986) UTHAYAN - A RIVERY TAMIL DAILY இதழ்:127

# இணைப்புச் சார்ந்த தீர்வையே இந்தியா வலியுறுத்தும்?

## இலங்கை அரசின் புதிய யோசனையை ஏற்குமாறு

### தமிழ்த் தலைவர்களுக்கு நிர்ப்பந்தம் இராது

புதுடில்லி, ஏப்ரல். 15

சமஷ்டி அரசமைப்பின் கீழ் வடக்கு- கிழக்குப் பகுதிகளை ஏதாவது ஒரு வகையில் இணைக்கும் நடைமுறை ஒன்றையே தீர்வாக முன் வைக்குமாறு இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தும் என்று நம்பகரமாகத் தெரிகிறது.

இலங்கை அரசு கொண்டு போகும் புதிய யோசனை எதையும் ஏற்குப்படி தமிழர் விடுதலைக் கூட்டணியினரை நிர்ப்பந்திக்கும் போக்கை இந்திய அரசு அதிகாரிகள் கடைப்பிடிக்கமாட்டார்கள் என்றும் நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இலங்கையில் மீண்டும் இனப் பிரச்சினை எழாத முறையில், ஒரு தீர்வைக் காண வேண்டும் என்பதில் இந்தியா முழு மூச்சாக இருக்கிறது என்று டில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

பஹாமாஸ் பொதுநலவமைப்பு மாநாட்டுக்குச் செல்லும் முன்னர் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழர் தலைவர்களை டில்லியில் வைத்துச் சந்தித்த சமயத்திலேயே வடக்கு- கிழக்கு இணைப்புப் பற்றிய யோசனையை ஏற்றுக்கொண்டார்.

பஹாமாஸில் வைத்து திரு. ஜெயவர்த்தனவிடமும் இந்த யோசனையை திரு ராஜீவ் காந்தி சமர்ப்பித்தார்.

அன்று தொடக்கம் தமிழ்மொழி மாநில அமைப்பு ஒன்றை இலங்கைத் தமிழருக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் இந்தியா சடுபட்டு வந்தது.

அதில், இப்போது எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்று டில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் யூனியன் பிரதேச அந்தஸ்துடன் கூடியதான மாகாணசபைத் திட்டத்தைக் கொண்டதாகச் சொல்லப்படும் இலங்கை அரசின் புதிய யோசனை, இந்திய அரசு வட்டாரங்களுக்கு திருப்தி அளிக்க மாட்டாது என்று விஷயமறிந்த வட்டாரங்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) இங்கு தெரிவித்தன.

## புதிய யோசனைகளுடன் ஹமீத் புதுடில்லி புறப்பட்டார்

### தீர்வுக்கு வழி பிறக்கும் என்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 16

கொண்டு போகும் புதிய யோசனைகள் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண உதவும் என்ற நம்பிக்கையுடன் செல்கின்றேன்.

இப்படி வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது செய்தியாளரிடம் சொன்னார்.

நேற்று நண்பகல் அளவில் அமைச்சர் ஹமீத் புதுடில்லி பயணமானார்.

புதிய யோசனைகள் இனப் பிரச்சினையைத் தீர்க்க உதவும்.

இந்த யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவற்றை உடனடியாக அமுல் நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

இப்படி அமைச்சர் சாஹுல் ஹமீது சொன்னார்.

### சுபநேரம்

16--4--1986

புதன்கிழமை

சுபநேரம்:
4.34 முதல் 6.04 வரை
ராகுகாலம்:
12.04 முதல் 1.34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## தமிழரின் உள்ளங்களை வெல்ல வேண்டும்

### லலித் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 16

சகல இன மக்களும் பாதிக்காத வண்ணம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி செய்தியாளர்களிடம் சொன்னார்.

தமிழ் மக்களின் உள்ளங்களை நாம் வெல்ல வேண்டும்.

அதன்மூலம் இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண வேண்டும்.— என்றும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார்.

லீவு வழங்க மறுத்ததால்

## இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொலை! சார்ஜண்ட் கைது!!

கொழும்பு, ஏப். 16

மொரட்டுவ பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஏர்ன் பீரிஸ் துப்பாக்கிச் சூட்டால் மரணமானார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

விடுமுறையில் செல்ல விரும்பி சந்தேகநபரான சார்ஜண்ட் விண்ணப்பித்து இருந்தாராம். அவ் விண்ணப்பத்தை ஏற்க முடியாது என்று இன்ஸ்பெக்டர் கூறிவிட்டாராம்.

ஆத்திரம் கொண்ட நிலையில் சார்ஜண்ட் துவக்கை எடுத்து இன்ஸ்பெக்டரைச் சுட்டதாகக் கூறப்படுகிறது.

## 15 தமிழர்கள் கைது!

திருகோணமலை, ஏப். 16

கும்புறுபிட்டிக் கிராமத்தில் நடந்த திங்கட்கிழமை காலை போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையில் நிகழ்ந்த மோதலைத் தொடர்ந்து நடந்த தேடுதலில் சுமார் 15 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

## காங்கேசன் சுன்னாகம் பகுதியில் கடையடைப்பு

காங்கேசன்துறை, ஏப் 16

நேற்றுத் திடீரென விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஒன்றை அடுத்து காங்கேசன்துறை மாவிட்டபுரம், தெல்லிப்பளை மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் நேற்று முழுமையாகக் கடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் பயணிகளுக்கு படையினர் அளித்த புத்தாண்டு உபசாரம்

பலாலி, ஏப்ரல் 16

புத்தாண்டு தினத்தன்று ஆனையிறவு தடைமுகாமைக் கடந்து சென்ற பயணிகளுக்கு முகாமில் அன்பான வரவேற்பும் உபசாரமும் காத்திருந்தன.

சிறுபடையினர் பயணிகளை பண்பாக வரவேற்று உபசரித்தனர்.

இதுபற்றிய விவரம் வருமாறு;

ஆனையிறவுத் தடைமுகாமைத் தாண்டிச் சென்ற பஸ், மினி பஸ் பயணிகளை ஆயுத படையினர் தடைமுகாம் அருகில் மறித்தனர்.

சோதனை இடுவதற்குப் பதிலாக குளிர்பானங்களை வழங்கி உபசரித்தனர். பஸ்களில் இருந்த ஆண் பயணிகளை இறக்கி குளிர்பானங்கள் வழங்கினர்.

சில சிப்பாய்கள் குழந்தைகளை தூக்கி அணைத்த வண்ணம், அவர்களுக்கு டொபி கொடுத்து உபசரித்தனர்.

நமோ, நமோ என்று கூறிய வண்ணம்தான் சிப்பாய்கள் சிலர் குளிர்பானம் வழங்கினர்.

'இப்புத்தாண்டு தினத்தில் நாடும், மக்களும் சுபீட்சமடைய வாழ்த்துகின்றோம்" இப்படி தமிழில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஆனையிறவு பொலீஸ் பொறுப்பு அதிகாரியின் முத்திரையுடன் பயணிகளுக்கு வழங்கப்பட்டன.

இத்துண்டுப் பிரசுரத்தில் புல்லாங்குழல் ஊதும் கண்ணனின் படமும் அச்சிடப்பட்டு இருந்தது.

# வாகனேரியில் நிலக்கண்ணி: மூன்று சிப்பாய்கள் பலி

## இராணுவ வாகனத்தில் ஏற்றி செல்லப்பட்ட பெண்களுக்கும் காயம்

— உதயன் அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

நேற்றுக் காலை 11 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனைக்கும் புனாணைக்கும் இடையில் வாகனேரி என்னும் இடத்தில் நிலக்கண்ணி ஒன்று வெடித்ததில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ஐந்து சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

இராணுவ வண்டித் தொடர் ஒன்றில் சென்று கொண்டிருந்த ஜீப் ஒன்றே கண்ணி வெடியில் சிக்கியது. இந்த ஜீப் சின்னாபின்னமாகியதாகக் கூறப்படுகிறது.

ஜீப்பின் சாரதி உட்பட மூவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

படுகாயமடைந்த ஐவர் ஹெலிக்கொப்டர் மூலம் பொலனறுவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களின் நிலை ஆபத்தான கட்டத்திலிருந்ததால் பின்னர் அவர்கள் ஐவரும் அவசரம் அவசரமாக கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

படுகாயமடைந்தவர்களில் ஒருவர் உயரதிகாரி என்று அஞ்சப்படுகிறது

இந்தச் சம்பவத்தை அடுத்து புனாணை ஆயுதப்படை முகாமிலிருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு மூன்று வாகனங்களில் இராணுவத்தினர் அவசரம் அவசரமாக விரைந்தனர்.

தற்பாதுகாப்புக்காக அவர்கள் பெண்கள் உட்பட சில பொதுமக்களைத் தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றனர்.

வேகமாக அவர்கள் சென்ற வாகனங்களுள் ஒன்று கவிழ்ந்ததாகவும்— இந்த விபத்தில் இராணுவச் சாரதியும் அப்பாவிப் பெண்கள் இருவரும் இரண்டு குழந்தைகளும் படுகாயமடைந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் கோஷ்டிகள் நடத்திய துப்பாக்கிச் சமரில் இரண்டு பேர் பலியா?

யாழ்ப்பாணம். ஏப்ரல்16

யாழ்நகரில் கடை ஒன்றிற்கு சீல் வைத்த சம்பவம் ஒன்று தொடர்பாக இளைஞர் கோஷ்டிகளுக்கு இடையில் நடந்த திங்கள் இரவு துப்பாக்கிச் சமர் இடம் பெற்றது.

நல்லூருக்கு அண்மையில் நிகழ்ந்த இந்த மோதலில் ஒரு பகுதியைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சில தினங்களுக்கு முன்னர் நகரில் உள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு இளைஞர்குழு ஒன்று சீல் வைத்தது.

மறுநாள் இரண்டா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## லிபியா மீது தாக்குதல்; அமெரிக்கா மீது கண்டனக்கணை

லண்டன். ஏப்ரல் 15

லிபியாவின் இரு நகரங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களை பல நாடுகள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன.

ரஷ்யா, இந்தியா, இத்தாலி, ஜோர்தான், சீனா, சிரியா, சுவீடன், ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் ஆகியவை அமெரிக்காவைக் கண்டித்த நாடுகளுள் சிலவாகும்.

இதேவேளை அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை முழு அளவில் ஏற்றுக் கொண்டு ஒத்தாசை வழங்கியிருக்கிறது பிரிட்டன்.

அமெரிக்கத் தாக்குதல் நீதியானது என இஸ்ரேல் அறிவித்தது.

லிபியத் தலைவரின் காட்டு மிராண்டித்தனமான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கும் செயலாகவும் பதிலடியாகவுமே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி றேகன் பகிரங்கமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மச்சான் இஞ்சி



என்ன ஒரு சாட்டு வரும் எங்கைபோய் எப்ப நோண்டுவோம் என்டது தானே அமெரிக்கா எப்பவும் பாத்துக்கொண்டிருக்கிறது வழக்கம். .!

## பிரிட்டிஷ் மகாராணியார் முடி துறப்பாரா?

லண்டன், ஏப் 15

சார்ள்ஸ் இளவரசர் மன்னராகவருவதற்கு இரண்டாவது எலிஸபெத் மகாராணி முடி துறப்பாரா?

அவர் முடி துறப்பார் என்று லண்டனில் ஊகங்கள் வெளியிடப்படுகின்றன.

எலிஸபெத் மகாராணிக்கு ஏப்ரல் 21 இல் 59 வயது பூர்த்தியாகிறது. 60 ஆவது பிறந்த நாளான அன்று முடி துறப்புச் செய்தியை வெளியிட்டு தனது பிரஜைகளை ஆச்சரியத்தில் ஆழ்த்துவார் என்று லண்டனில் பலத்த ஊகங்கள் நிலவுகின்றன.

அரண்மனை வட்டாரங்கள் இந்த ஊகங்களை மறுத்துள்ளன.

பிரிட்டனில் பெண்கள் 60 வயதை அடைந்ததுடன் ஓய்வு பெறுவது வழக்கம்.

எப்படி இருந்தாலும் மகாராணியின் பிறந்த தினம் அன்று சார்ள்ஸ் இளவரசனின் வருங்காலம் பற்றி ஆராயப்படும்.

மகாராணி 80 வயது வரை ஆட்சிபுரிந்தால் சார்ள்ஸ் இளவரசர் மன்னர் ஆவதற்கு 60 வயது வரை பொறுத்து இருக்க வேண்டும். அப்படி என்றால் தனது இளமைக்காலத்தை அவர் வீணே கழிக்க வேண்டி இருக்கவேண்டும் என்று கூறப்படுகின்றது.

### இடுப்பிலிருந்த குடத்திற்கும் சூடு விழுந்தது

கல்முனை, ஏப். 16

பாண்டிருப்பில் கொமாண்டோக்கள் நடத்திய தேடுதலில் ஒரு பெண் இடுப்பில் வைத்துக்கொண்டு சென்ற தண்ணீர்க் குடத்தின் மீதும் துப்பாக்கிச்சூடு தாக்கியது.

குடம் உடைந்த அதிர்ச்சியில் அப்பெண் அந்த இடத்திலேயே மயக்கமுற்று விழுந்தாள்.

பின்னர் மயக்கம் தெளிவிக்கப்பட்டது.

## புலிகள் அறிக்கை

சென்னை, ஏப். 15

மட்டக்களப்புப் பகுதியில் நிகழ்த்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சென்னையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்றுகாலை 10 மணியளவில் கதிரவெளி இராணுவ முகாமில் இருந்து ஒரு ஜீப், இரண்டு ஈ. எல். எவ் டிரக்குகளில் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது கொழும்பு மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள மியாங்கல் சந்தியில் வைத்து எமது வீரர்கள் நிலக்கண்ணி வெடித் தாக்குதல் நிகழ்த்தியதில் ஒரு ஈ. எல். எவ் டிரக் தகர்க்கப்பட்டது.

இதில் இருந்த இராணுவத்தினரில் 5 பேர் மரணம் அடைந்தனர் பலர் படுகாயம் அடைந்தனர். எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நகரை கலக்கிய குண்டுகள்

யாழ்ப்பாணம், ஏப். 16

நேற்று நள்ளிரவு 11-40 மணியளவில் யாழ்நகரைக் கலக்கும் வகையில் அடுத்தடுத்து நான்கு குண்டுகள் நகரின் மத்தியில் விழுந்து வெடித்தன.

செய்தி அச்சுக்குப் போகும்வரை ஏற்பட்ட சேதம் பற்றிய விபரம் ஏதும் தெரியவரவில்லை.

## ஊர்வலம் கடையடைப்பு ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

லிபியா மீது அமெரிக்கா நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலை கண்டித்து யாழ்ப்பாண முஸ்லிம்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நாளை நடத்தவுள்ளனர்.

இஸ்லாமிய இளைஞர் இயக்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது

நாளை காலை 8 மணிக்கு புதிய சோனகத்தெரு பள்ளிவாசலின் முன்பாக ஊர்வலம் ஆரம்பமாகும். அது புதிய சோனகத்தெரு புதுப் பள்ளிவாசல் வீதி, நாவலர் வீதி ஊடாக கச்சேரியைச் சென்றடையும்.

நாளையதினம் அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து பூரண ஹர்த்தால், கடையடைப்பு ஆகியவற்றை அனுஷ்டிக்கும்படியும் இஸ்லாமிய இளைஞர் இயக்கம் தமிழ் மக்களைக் கேட்டிருக்கிறது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனுக்கு வந்த காதல் கடிதத்திற்கு பதில் எழுதிய மனைவி

என் கணவருக்கு வரும் காதல் கடிதத்திற்கு நானே பதில் அனுப்புவேன்

இப்படிக் கூறுகிருர் நடிகர் சத்யராஜின் மனைவி திருமதி. மகேஸ்வரி.

அவருக்கு பல பெண் ரசிகைகள் இருப்பதும் — அவர்களிமிருந்து அடிக்கடி கடிதம் வருவதும் எனக்குத் தெரியும்.

காக்கிச் சட்டையில் அவர் நடித்த பிறகு தான் பல பெண் ரசிகைகளிடமிருந்து அவருக்கு கடிதம் வர ஆரம்பித்தது

பொள்ளாச்சியிலிருந்து ஒரு ரசிகை அவருக்கு காதல் கடிதம் எழுதியிருந்தார்

அதை என் கணவரிடம் படித்துக்காட்டி என்ன சொல்கிருர் என்பதை அறியமுயன்றேன்.

அவர் சிரித்தவாறே 'என் புகைப்படம் ஒன்றை அனுப்பி வை' என்ருர்.

அனேகமாக ரசிகைகளிடமிருந்து வரும் கடிதங்களை நான் படித்துக்காட்ட அவர் பதில் சொல்ல, நானே என் கைப்பட பதில் எழுதுவேன்.

— இப்படி திருமதி. சத்தியராஜ் கூறுகிருர்.

### சுரேஷின் கட்டுப்பாடு

சென்ற ஆண்டு 16 படங்களில் நடித்து அதிக படங்களில்

**தினசரி சினிமா**

ஹீரோ என்ற பெயர் வாங்கினேன்.

இந்த வருடம் அந்த மாதிரி அதிக படங்களை ஒப்புக் கொள்ளாமல் குறைத்துக் கொள்ளப் பார்க்கிறேன்.

என் விக்கையைக் குறைத்துத் தரமான படங்களாகப் பார்த்து நடிக்க முடிவு செய்திருக்கிறேன் — இப்படி சொல்பவர் சுரேஷ்.

## பண்புள்ள நல்லவர்களை உருவாக்குதல் ஆசிரியர் கடமை

யாழ்ப்பாணம், ஏப். 16

பரீட்சைக்கு மாணவர்களைத் தயாரித்தலே ஆசிரியர்களின் கடமை என நினையாது பண்புள்ள நல்லவர்களை உருவாக்குவதற்கேற்ற வகையில் ஆசிரியர்கள் தொழிற்பட வேண்டும். எமது சமுதாயம் எந்த அளவிற்கு தாய்மொழியாகிய தமிழை நேசிக்கிறதோ அந்த அளவிற்கு ஆங்கிலத்தையும் நேசிக்கின்றது. ஆங்கில அறிவையும் திறனையும் வளர்க்க ஆங்கிலப் போட்டிகள் உதவுகின்றன.

இவ்வாறு வண்ணை இனையதம்பி வித்தியாலய ஆங்கில தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளர் திரு என். பரமநாதன் தமது உரையில் குறிப்பிட்டார்.

ஆங்கில தினப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. சிவநாயகமூர்த்தி பரிசுகளை வழங்கினர். வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மின்வைற் அதிபர் திரு. க. கனகராசா, ஆசிரியர் திரு க. சிவகுரு ஆகியோர் சிறப்புரை வழங்கினர்கள் செல்வி இ. யோகராணி நன்றியுரையாற்றினர்

இப்போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கான புத்தகப் பரிசில் முழுவதையும் 'ரெவிகுளோப்' நிறுவனம் வழங்கியுள்ளது மாணவர்களது ஆங்கில கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# இனக் கலவரத்தால் பொருளாதாரம் பாதிப்பு

## ஆசிய பசுபிக் பிராந்திய பொருளாதார குழு தகவல்

கொழும்பு, ஏப். 16

இலங்கையில் தொடரும் உள்நாட்டுக்கலகம் அதன் பொருளாதார வளர்ச்சித் தேவையில் குறிப்பிடத்தக்க அளவு பாதிப்பை ஏற்படுத்தியது.

ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பொருளாதார, சமூக ஆணைக்குழு (ESCAP) தனது 1985 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இலங்கையின் முக்கிய துறைகளில் இனப் பிரச்சினை மோசமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது.

அரச முதலீடு, முக்கியமாக தனியார் முதலீடுகள் 1983 க்குப் பின்னர் வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளது

உல்லாசப் பிரயாணத்துறை 1983 க்குப் பின்னர் தொடர்ந்து சரிந்தே வந்தது.

பொருளாதார வளர்ச்சித் தேவையில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி அடைந்தும் அதைத்தாங்கும் அளவு நாடு இருந்தது

மகாவலி அபிவிருத்தி சம்பந்தப்பட்ட மட்டில் உற்பத்தித்துறை உயர் வளர்ச்சி கண்டுள்ளது.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

## சர்வதேச சமாதானசபை வருடாந்த மாநாடு

சாவகச்சேரி, ஏப்ரல் 16

சர்வதேச சமாதான சபையின் வடபிராந்திய கிளையின் வருடாந்த மாநாடு அண்மையில் அறவழிப் போராட்டக் குழுவின் பணிமனையில் நடைபெற்றது.

50க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் திரு. வீ. எஸ் துரைராசா, திரு க ஜீவகதாஸ் ஆகியோர் மீண்டும் முறையே தலைவர், செயலாளர் ஆகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

திரு. சண் காளிதாஸ், செல்வி சோ. நிர்மலா ஆகியோர் உபதலைவர்களாகவும் திரு எம். சண்முகநாதன் உபசெயலாளராகவும், திரு செல்லத்துரை ஜேசுதாஸ் பொருளாளராயும் தெரிவு செய்யப்பட்டனர்.

## டெலிவிஷன் படம் பார்த்தவர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப்ரல் 16

மட்டக்களப்பு ரயில்வே விடுதியில் டெலிவிஷன் படம் பார்த்துக்கொண்டிருந்த ரயில்வே ஊழியர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்

இறந்தவரின் பெயர் ஜோன்பிள்ளை.

கடந்த சனிக்கிழமை இரவு ஏழு மணியளவில் விடுதியில் டெலிவிஷனில் படம் பார்த்துக்கொண்டிருந்தாராம்.

ஒரு குழந்தைக்குத் தந்தை இவர்

### பாஸ்கா திருநாள்

உடுப்பிட்டி, ஏப்.16

கரவெட்டி பரலோக மாதா ஆலயத்தில் பாஸ்காத் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

இத்திருநாளுக்கான திருப்பலிப் பூசையை கரவெட்டிபங்குத்தந்தை அருட்திரு சகாயம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார்..

## கொக்குவிலில் ரூ. 3 லட்சம் பெறுமதி நகை, பொருள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

கொக்குவிலில் வீடு ஒன்றில் ஓட்டைப் பிரித்து சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பொருள்கள் கொள்ளை இடப்பட்டன.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வெள்ளிக்கிழமை இரவு 11 30 மணி அளவில் வான் ஒன்றில் வந்து இறங்கிய இனந்தெரியாத 15 பேர் செல்லப்பா சின்னத்தம்பி என்பவரின் வீட்டுக் கதவைத் தட்டினர்.

வீட்டுக்காரர் எழும்பாது போகவே, வீட்டின் மேல் ஏறி, ஓட்டைப் பிரித்து சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், டி.வி.மற்றும் பொருள்களை அவர்கள் அபகரித்துச் சென்றனர்.

## உப்புவெளி குடியிருப்பாளருக்கு காப்புறுதி நஷ்டஈடு கிடையாது

திருகோணமலை, ஏப் 16

திருகோணமலையில் 1985 செப்டம்பரில் இடம் பெற்ற வன்செயல்களின் போது பாதிக்கப்பட்ட காப்புறுதி செய்த உப்புவெளிப் பகுதிக்குடியிருப்பாளர்களுக்கு நஷ்டஈடு வழங்க முடியாது என்று தேசியக்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் காப்புறுதி செய்த சுமார் 140 குடியிருப்பாளர்கள் நஷ்டஈடுகோரி விண்ணப்பித்தனர். பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக உடைமைகளுக்குச் சேதம் விளைந்தது என்று பொலீஸார் அறிக்கைகள் வழங்கியுள்ளதால் நஷ்டஈடு வழங்கமுடியாதிருப்பதாகக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது

பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து ஒருசங்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

திரு. விஜயக்கூன் தலைவராகவும் திரு எஸ். பி. ஜெயரத்னராஜா செயலாளராகவும், திரு இ பாலசிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சாவகச்சேரியில் நூல் நிலையம் விஸ்தரிப்பு

சாவகச்சேரி, ஏப்ரல் 16

சாவகச்சேரி நகரசபை பொது நூல்நிலையத்தை ரூபா மூன்று இலட்சம் செலவில் விஸ்தரிக்க இருக்கிறது.

இந்த விஸ்தரிப்பின் ஓர் அம்சமாக சிறுவர் பகுதியும் புதிதாக அமைக்கப்பட இருக்கிறது.

மேலும் நுணுவில், சாவகச்சேரி வடக்கு வட்டாரங்களில் தனித்தனியாக சுமார் ஒரு இலட்ச ரூபா செலவில் உப நூல் நிலையங்களும் நிறுவ ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாயும் சபையின் செயலாளர் திரு க. நவரத்தினராசா தெரிவித்தார்.

### தேர்த்திருவிழா

புங்குடுதீவு, ஏப்ரல் 16

புங்குடுதீவு கிழக்கு இராஜேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா இம்மாதம் 23ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 24ஆம் திகதியும் நடைபெறும்.

## நாவலர் சிந்தனைகள் நெறிமுறைக் கோவையாக இன்று ஏற்கப்பட்டுள்ளன

### மலேசியாவில் ஈழத்துச் சிவானந்தன்

மலாக்கா, ஏப், 15

ஐந்தாம் குரவராகக் கணிக்கப்பட்ட ஆறுமுக நாவலர் பெருமானின் தெளிந்த சிந்தனைகளே நமது வழிபடு வாழ்க்கைக்கு நெறிமுறைக் கோவையாக ஏற்கப்பட்டுள்ளன.

இப்படி புலவர் ஈழத்துச் சிவானந்தன் சொன்னார்

மலேசியா, மலாக்கா மான் தம்பின் தையல் நாயகி சமேத வைத்தீஸ்வரப் பெருமான் ஆலய மகாகும்பாபிஷேக விழாவில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் பேருரை நிகழ்த்தினர்.

அவர் மேலும் பேசுகையில் தமிழ் மந்திரங்கள் என்று கூறப்படும் நால்வர் தமிழும் நாவலர் தமிழும் சைவத்தையும் தமிழ் மொழியையும் வளர்க்கும் கருவூலங்களாக கருதப்படவேண்டியவை என்ருர்.

### பாராட்டு விழா

மட்டக்களப்பு. ஏப். 16.

அண்மையில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள இ த ஆ சங்கத்தலைவர் திரு டி. எஸ். கே வணசிங்காவிற்கு பாராட்டு விழா நடாத்த இ த. ஆ. ச. மட்டக்களப்பு மாவட்ட கிளைமுடிவுசெய்துள்ளது.

இவரது ஆசிரியசேவை, தொழிற்சங்க சேவை ஆகியவற்றை பாராட்டி கௌரவிக்குமுகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழா அடுத்தமாதம் முதல் வாரத்தில் நடைபெறும்.

## அரசியல்வாதிகள் இந்த நாட்டை குட்டிச்சுவராக்கி விட்டனர்

### பௌத்தகுரு கூறுகிருர்

நாவலப்பிட்டி, ஏப். 16

அரசியல்வாதிகள் இந்த நாட்டை குட்டிச் சுவராக்கி விட்டார்கள்

நாவலப்பிட்டியில் இனப்பிரச்சினை தொடர்பாக கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய சிறிபாத பிரிவேனையின் பிரதம குரு பியரட்ன தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்

நாவலப்பிட்டிய இந்து கலாசார கழகத் தலைவர் திரு. எஸ் பாலச்சந்திரன் கருத்தரங்குக்கு தலைமை வகித்தார்.

தேரர் மேலும் கூறியதாவது:- ஆட்சியைக் கைப்பற்றுவது தான் இன்று அரசியல்வாதிகளின் நோக்கமாக இருக்கிறது.

1983 ஆம் ஆண்டு வன்செயலை ஆராய்ந்து பார்த்தால் தூண்டிவிட்டவர்கள் நிம்மதியாக இருக்கிருர்கள். சகோதரர்கள் போன்று வாழ்ந்த சிங்களவர்களும் தமிழர்களும் பாதிப்பு அடைந்துள்ளார்கள்.

நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து கொண்டு போகிறது. இதைப்பற்றி எவரும் கவலைப்படுவதாக இல்லை.

1956 இல் நாட்டின் கல்வித்திட்டத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. முன்னர் தமிழ் சிங்களக் குழந்தைகள் ஒரே பாடசாலையில் ஒன்ருகப் படித்தனர். வகுப்பு வாதம் இல்லை. ஒற்றுமை நிலவியது.

ஆனல் 56 இன் பின் நிலைமை மோசமாகியது. சிங்களப் பாடசாலைகள் துட்டகைமுனு பற்றி போதித்தன. தமிழ்ப் பாடசாலைகள் எல்லாளன் பற்றிப் போதித்தன

தமிழர்களும் சிங்களவர்களும் இந்தியாவில் இருந்து இங்கு வந்தவர்கள் நமக்குள் சண்டை ஏன்? இப்படி அவர் கேட்டார்

### பாடசாலை வளர்ச்சி பெற்றோர் கையில்

கிளிநொச்சி, ஏப்ரல் 16

பாடசாலையின் வளர்ச்சி பெற்றோரின் கையில் தான் தங்கியுள்ளது.

கிளிநொச்சி புதுமுறிப்புக் கிராமத்தில் அமைக்கப்பட்ட பாடசாலையை அரசாங்கப் பாடசாலையாக அங்கீகரித்து திறந்து வைத்து உரையாற்றிய கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதுமுறிப்புக் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. மு இராமநாதன் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

### அங்குரார்ப்பண கூட்டம்

உருத்திரபுரம், ஏப்ரல் 16

புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை பாடசாலை மண்டபத்தில், பாடசாலை அதிபர் எஸ். மகேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.


**LANKA CEMENT LIMITED**

KANKESANTHURAI.

**முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் யாழ். மாவட்டத்தினுள் தேடி எடுத்து லங்கா சிமெந்து லிமிட்டெட்டுக்கு விநியோகித்தல்:**

எமது விரிவான ஆய்வின் பயனாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே மேற்படி களிமண்ணை எமக்கு விநியோகிக்க ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்கண்டவாறு எம்மைத் தொடர்புகொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகிறேரும்.

1. ஒப்பந்தக்காரர்கள் தாங்கள் களிமண் எடுக்கும் பிரதேசத்தினைக் காட்டும் ஒரு சாதாரண வரைபடம் (Location Drawing) ஒன்றை அமைத்துக் கீழ்காணும் கேள்விப்பத்திரத்துடன் அனுப்பவேண்டும்.
2. வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதேசத்தில் எடுக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் பெயர், சுயவிலாசமிட்டு எடுக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் கேள்வுப்பத்திர இலக்கமான LCL|SU|T|01|86 குறித்து அரக்கு முத்திரையிட்டு 25-04-1986 காலை 10.30 மணிக்கு முன் கேள்வுப்பத்திரத்துடன் 'உதவிப் பொது முகாமையாளர்' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும்.
3. ஒப்பந்தக்காரர்கள் வெவ்வேறு எத்தனைப் பிரதேசங்களிலும் இருந்து களிமண்ணை விநியோகிக்கலாம். ஆனல் களிமண் எடுக்கப்படும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் சாதாரண வரைபடத்துடன் (Location Drawing) ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் ஒவ்வோர் பிரதேசத்தில் இருந்தும் பெறப்பட்டு மேற்குறிப்பிட்டபடி பிரதேசத்தின் பெயர், ஒப்பந்தக்காரரின் பெயர், சுயவிலாசம், கேள்வுப்பத்திர இலக்கம் என்பன எழுதப்பட்டு, கேள்வுப்பத்திர முடிவு நாளாகிய 25-4-86 காலை 10 30 மணிக்கு முன் எமது உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்
4. (i) மேற்படி களிமண்ணை எடுக்கப்படும் பிரதேசத்தில் விநியோகிப்பதற்கான 1 தொன்னுக்கான விலைக்கூறு.
   (ii) மேற்படி களிமண்ணை அப்பிரதேசத்திலிருந்து ஏற்றி எமது தொழிற்சாலைக்குக் கொண்டுவந்து எமது களிமண்சாலையில் இறக்குதல் தொன் ஒன்றுக்கான விலைக்கூறு.
   (iii) நாள் ஒன்றுக்கு விநியோகிக்கக்கூடிய மிகக் குறைந்த தொகை களிமண்—தொன்னில்.

மேற்படி விலைக்கூறுகளைத் தங்களால் தயாரிக்கப்பட்ட 2 பிரதிகள் கொண்ட படிவங்களில் தயாரித்து அரக்கு முத்திரை இடப்பட்ட 9"X4" அளவுகொண்ட உறையில் இட்டு "உதவிப் பொது முகாமையாளர்", லங்கா சிமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை என்ற விலாசமிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வுப்பத்திர இலக்கமான LCL. SU|T|01/86 எழுதி 25-04-1986 காலை 10.30 மணிக்கு முன் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்வுப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்கவும். மேற்படி கேள்வுப்பத்திரங்கள் கேள்வுப்பத்திர முடிவு நேரமாகிய 10.30 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

மேற்படி விடயமாக மேலும் தகவல்களைப் பெற விரும்புவோர் விநியோக அதிகாரியை அவரது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் சந்திக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
லங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

09-04-1986.


## பாதுகாப்பு அதிகாரி அரசியல் வாதியாக மாறும் சாத்தியம் உண்டாம்

கொழும்பு, ஏப்ரல் 16

பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு தலைவர் ஜனநாயகக் கட்சி ஒன்றில் சேர்ந்து இருளில் இருந்து நாட்டை ஒளிக்கு வழி நடத்திச் செல்லும் சந்தர்ப்பம் உண்டு

கொழும்பில் இருந்து வெளியாகும் 'வீக்கெண்ட்' ஆங்கில வார இதழில் வெளியிடப்பட்ட புதுவருட ஜோஸ்யத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது

சோதிடத் துறையில் பிரபலமான டாக்டர் கிங்ஸ்லி குணதிலக கூறியுள்ள புதுவருட பலன்கள் 'வீக்கென்'டில் வெளியாகின.

அவை வருமாறு:-

இந்த ஆண்டு ஜூலை 12க்கும் ஆகஸ்ட் 17க்கும் இடையில் நாட்டில் முக்கிய மாற்றம் ஒன்று நிகழும். ஓர் உயர் அரசியல் தலைவரின் மறைவுடன் அந்த மாற்றம் ஏற்படும் ... எதிர்க்கட்சிகளிலும் உள்ள அதிருப்தி அடைந்த உயர் அரசியல்வாதிகள் ஒரு கூட்டணியை அமைத்து இயங்கும் சந்தர்ப்பமும் உண்டு

மக்களிடமிருந்தும் ஆளும் கட்சி மோசமான தீர்ப்பை எதிர்கொள்ள வேண்டிநேரிடலாம்.

பதவியில் இருக்கும் அரசியல்வாதிகள் பதவியில் இருக்க முடியாதநிலை ஏற்படலாம்.

ஆட்சி உயர் மட்டத்தில் மாற்றங்களும் ஏற்படலாம்

நவம்பர் 8க்கும் டிசம்பர் 21க்கும் இடையில் மக்கள் பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திக்கலாம்.

ஜூன் 8க்கும் ஜூன் 12க்கும் இடையில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களில் பொதுத் தேர்தல் நடக்கவது பற்றிய சாத்தியக் கூறுகள் தெரியவரலாம்.

இப்படி சோதிடர் டாக்டர் ... புதுவருடப் பலனில் தெரிவித்திருக்கிருர்.


**LANKA CEMENT LIMITED**

KANKESANTHURAI.

**ஏல விற்பனை**

பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள், 'ஆங்கிள் அயன்கள்' (Angle Iron) "J" வடிவ உருக்குத் தீராந்திகள், ஆயுதங்கள் என்பன 1986-04-20 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் லங்கா சிமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனையில் விடப்பட உள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986-04-19 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4-00 மணி வரை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3ஆம் கூற்று முடிவடைந்த உடன் முழுத்தொகையின் 1/3 பகுதிப் பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு, மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.

பொருட்கள் பகுதி பகுதியாகக் கொள்வனவு செய்வோர் ஏல விற்பனைத் திகதியான 20-4-1986 இல் இருந்து 02 நாட்களுக்குள்ளும் முழுக் கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்குறிப்பிட்ட தினத்தில் இருந்து (5) ஐந்து நாட்களுக்குள்ளும் விற்கப்பட்ட பொருட்களை அகற்றவேண்டும்.

பொது முகாமையாளர்,
லங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

16-04-1986.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்பு மில்லை. மனித உள்ளங்களில் இறைவன் இருக்கின்றான். அவனை இறைஞ்சுவது மாந்தர் கடன்.

-யோகர் சுவாமிகள்:


# உதயன்

உண்மை - அஞ்சாமை - ஒருமைப்பாடு

இல. 15, கஸ்தூரியார் வீதி, (மின்சார நிலைய வீதி), யாழ்ப்பாணம். 16 04-86 தொலைபேசி: 24805 22073 த. பெ. 23


## மாணவிகள் முன்மாதிரி காலத்தால் செய்த உதவி

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 'இன்ராக்' கழகத்தைச் சேர்ந்த மாணவிகள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சிரமதானம் செய்தார்கள். ஆஸ்பத்திரி வார்ட்டுக்களைச் சுத்திகரித்து நிந்தை பூசினர்கள்

இந்தச் செய்தி வாசிப்பதற்கும் கேட்பதற்கும் சிறிதாகத் தோன்றினாலும் அதில் பெரும் மகத்துவங்கள் அடங்கி உள்ளன-

மாணவப் பருவத்தில் பொதுத் தொண்டு செய்வதற்கான ஒரு பயிற்சி சம்பந்தப்பட்ட மாணவிகளுக்குக் கிடைத்தது. அது ஏனைய மாணவ. மாணவிகளுக்கு முன்னோடியான நல் உதாரணமாகவும் அமைந்தது

மாணவர், விடுமுறை நாட்களைப் பயனுள்ள வகையில் சமூகத் தொண்டு செய்து கழிப்பதால் மக்களுக்கும் நல்லது மாணவர்களுக்கும் நல்லது மாணவரின் சிந்தை — புலன் வேண்டாத நடவடிக்கைகளை நாடி அவர்களின் எதிர்காலத்தைப் பாழடிக்காமல் இது போன்ற நற்பணிகளை நாடுவது நாட்டுக்கும் நல்லது அததோடு அவர்கள் தொழில் மகத்துவத்தை அறியவும் ஒரு வாய்ப்பு உண்டாக்கும்.

ஆகையால் யாழ்ப்பாணத்தில் நல்ல முன்மாதிரி காட்டிய சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு எமது சபாஷ்! ஏனைய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியரும் இதுபோன்ற நற்பணிகளில் ஈடுபடவேண்டும் எனக் கேட்கின்ருேம்.

தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில், தமது அலுவல்களைத் தாமே செய்தாக வேண்டும். பிறர் உதவி — அரசாங்க உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது

ஆஸ்பத்திரி போன்ற அத்தியாவசிய சேவை ஸ்தாபனங்கள் தங்குதடை இன்றி இயங்குவதற்கு மக்கள் ஆதரவு அவசியம்.

மாணவிகளின் முன்மாதிரியைப் பின்பற்றி ஏனைய பொது நல சங்கங்களும் சிரமதான வேலைகளில் ஈடுபடலாம்.

அதனை விடவும் ஒருபடி உயரச் சென்று வார்ட்டுகளைப் பராமரித்தும் உதவி புரியலாம். தென்னிலங்கையில் உள்ள ஆஸ்பத்திரிகளில் வெவ்வேறு வார்ட்டுகளை சமூக நல இயக்கங்களே பராமரிக்கின்றன.

அதுபோன்ற சேவையை றோட்டரி, லயன்ஸ் ஆகிய கழகங்களும், மற்றும் சமூகப் பணி மன்றங்களும் ஏன், வை. எம். சி. ஏ. இந்து இளைஞர் சங்கங்கள் ஆகிய சமய இயக்கங்கள் கூடச் செய்யலாம்.

நிதி வசதிபடைத்த வர்த்தகர்கள், தனியார் ஸ்தாபனங்களும் அச்சேவையைச் செய்யலாம். செய்ய வேண்டும்.

பல வசதியீனங்கள், குறைபாடுகள் காரணமாக ஸ்தம்பித நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பகுதி ஆஸ்பத்திரிகள் எல்லாவற்றுக்கும் முன் சொன்ன சகல சாராரின் ஆதரவும் உதவியும் தேவை.

வார்ட்டுகளைப் பராமரிக்கும் சேவை மட்டுமன்றி, உபகரண வசதிகளைச் செய்து கொடுப்பது மேலும் சிறந்தது.

அண்மையில் கைலாச பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த ஓர் அன்பர் தமது தயாரின் நினைவாக ஆஸ்பத்திரிக்கு சக்கரக்கதிரை ஒன்றை அன்பளிப்புச் செய்தார். அதே போன்று ஏனையோரும் ஆஸ்பத்திரிகள் சரிவர இயங்குவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து உதவ முடியும். மனம் இருந்தால் இடம் உண்டு.

சிறு துளி பெருவெள்ளம். சிறிது சிறிதாகச் சேரும் பொருள் உதவியும் தொண்டும் நிச்சயம் ஆஸ்பத்திரிகளின் வசதிகளை பெருக்கும்.

அவை காலத்தால் செய்த உதவிகளாகவும் அமையும்.

# லிபியா மீது அமெரிக்கா திடீர் தாக்குதல்

## கடாபி மாளிகைக்கும் இலக்கு; இருநகரங்கள் மீது குண்டு வீச்சு!

லண்டன், ஏப்ரல் 15

லிபியாவின் இரண்டு நகரங்கள் மீது இன்று (செவ்வாய்க்கிழமை) காலை அமெரிக்கப் போர் விமானங்கள் திடீர் தாக்குதலை நடத்தின. அடுத்தடுத்து பெரும் எண்ணிக்கையில் குண்டுகள் வீசப்பட்டன.

லிபியத் தலைவர் கடாபியின் மாளிகையும் தாக்குதலுக்கு உள்ளானது. கடாபியின் குடும்ப உறுப்பினர்களும் காயம் அடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

பிரிட்டனின் தளங்களில் இருந்து சென்ற மூன்று அமெரிக்கப் போர் விமானங்கள் இத்தாக்குதலை நடத்தின

லிபியாவில் உள்ள பிரெஞ்சு தூதரகமும் இத்தாக்குதலில் சேதமடைந்தது.

தாக்குதல்களைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் திரு. றேகன் டெலிவிஷன் மூலம் செய்தி ஒன்றை விடுத்தார்.

அச்செய்தியில் "பயங்கரவாதிகள் முகாம்களைத் தான் அமெரிக்க விமானங்கள் தாக்கின" — என்று அறிவித்தன.

இதனிடையில் பிரிட்டனில் உள்ள தளம் ஒன்றில் இருந்து சென்று தாக்குதலை நடத்த அமெரிக்க போர் விமானங்களை அனுமதித்தது குறித்து பிரிட்டனில் அரசியல் வட்டாரங்கள் அதிர்ச்சியைத் தெரிவித்தன.

லிபியாவில் உள்ள சுமார் 5 ஆயிரம் பிரிட்டிஷ் பிரஜைகளின் நலன்களைக் கவனிக்காமல் பிரிட்டன் நடந்து கொண்டுள்ளதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு உள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்க விமானத் தாக்குதலை அணிசேரா நாடுகள் இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

லிபியாவுக்கு மண்டல சார்பற்ற இயக்கம் உறுதியான ஆதரவைத் தெரிவித்து உள்ளது.

இயக்கத்தின் தலைவரான இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அமெரிக்கா நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

## பிரிட்டனில் வாக்காளர் மனநிலை மாறுகிறதாம்

லண்டன், ஏப். 15

பிரிட்டனின் வாக்காளர் மனநிலை மாறி வருகிறதாம்

லண்டன் தொகுதியின் இடைத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி

**வெளி உலகில்**

யீட்டியதைத் தொடர்ந்து இக்கருத்து வெளியிடப்பட்டது.

ஆளும் கட்சியை புல்ஹாம் தொகுதியில் 4,789 வாக்குகளால் தோற்கடித்த தொழிற்கட்சி வேட்பாளர் நிக் ரெய்ன்ஸ்போர்ட் இக்கருத்தை வெளியிட்டார்

## குறட்டைக்கு மருந்து கண்டுபிடிப்பு

டொறன்டோ, ஏப். 15

குறட்டைக்கு மருந்து கண்டுபிடிக்கப் பட்டு விட்டது.

கனேடிய வைத்திய நிபுணர்கள் இம்முயற்சியில் பெரும்பாலும் வெற்றி கண்டுவிட்டனர்.

சிறுசத்திர சிகிச்சை ஒன்றின் மூலம்தான் குறட்டைக்கு நிரந்தரப் பரிகாரம் காணப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

10 பேரின் மீது இதுசம்பந்தமான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 8 பேர் மீதான சத்திர சிகிச்சை வெற்றியீட்டியது

டாக்டர் ஜோர்ன் ராஷிஸ் இது பற்றி கருத்தரங்கு ஒன்றில் பேசினர்.

வயோதிபர்களில் அரைவாசிப் பேர் குறட்டை விடுபவர்கள் அவர்களில் 10 இல் ஒருவர் 'குறட்டை விடுவதில் மன்னர்'.

கணவன் விடும் குறட்டை தாங்க முடியாது, மனைவி வேறொரு அறையில் தூங்குவார்.

இப்படியான சிக்கல்களுக்கு இனி நிரந்தரத் தீர்வு காணப்பட்டுவிடும் என்று டாக்டர் ராஷிஸ் சொன்னர்.

மூன்ருவது உச்சிமாநாட்டிற்கு முன்னர்

# ரஷ்ய - அமெரிக்க உடன்பாடு சாத்தியமில்லை

வாஷிங்டன், ஏப். 15.

மூன்ருவது உச்சி மாநாடு நடத்தப்படுவதற்கு முன்னர் எதுவித உடன்படிக்கையும் ரஷ்யாவுடன் செய்துகொள்ள அமெரிக்கா தயாராகஇல்லை.

இப்படி இராஜாங்க அமைச்சு உதவிச்செயலாளர் மார்க்பாமர் சொன்னர்.

கடந்த ஆண்டு ஜெனிவாவில் கோர்பச்சேவ் — றீகன் முதலாவது உச்சி மாநாடு நடந்தது.

இரண்டு தலைவர்களும் தனிப்பட்ட ரீதியிலான தொடர்புகளை வளர்த்துக்கொள்ளவே முதலாவது உச்சிமாநாடு உதவியது

இந்த ஆண்டில் நடைபெறவிருக்கும் இரண்டாவது உச்சி மாநாட்டில் இரண்டு வல்லரசுகளுக்கும்இடையிலான கருத்து வேற்றுமைகளைக் குறைக்கும் நடவடிக்கைகளில் தான் கவனஞ்செலுத்தப்படும்,

மூன்ருவது உச்சி மாநாட்டில்தான் இரண்டு வல்லரசுகளுக்கும் இடையில் ஏதாவது உடன்படிக்கைகள் கையெழுத்தாகும்.

முதல் உச்சி மாநாடு போன்று இரண்டாவது உச்சிமாநாடும் அமைவதை நாம் விரும்பவில்லை.

இப்படி ராஜாங்க அமைச்சின் உதவிச்செயலாளர் திரு. மார்க் பாமர் சொன்னர்.

கடந்த ஆண்டு ஜெனிவாவில் இடம் பெற்ற முதலாவது உச்சிமாநாட்டில் இரண்டாவது உச்சிமாநாட்டை 1986 இல் அமெரிக்காவிலும், மூன்ருவது உச்சி மாநாட்டை மாஸ்கோவில் 1987 இலும் நடத்த இரண்டு தலைவர்களும் இணங்கியிருந்தனர்.

அவற்றை ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகள் இரண்டு நாடுகளுக்கும் இடையே சீர்குலைந்து வரும் உறவுகளினுல் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன

# ஜனதிபதி இனவாதியானல் படைகளும் அப்படியே மாறும்

## சவூதி அரேபியாவில் பத்திரிகையில் வந்த கடிதம்

"இஸ்ரவேல் பயங்கரவாதிகளை இலங்கை இறக்குமதி செய்கிறது — என்ற தலைப்பில் பாகிஸ்தான் பிரஜை முகம்மது யூசுப் என்பவர் எழுதிய கடிதம் இது.

சவூதி அரேபியாவில் இருந்து வெளியாகும் 'சவூதி கஸட்' பத்திரிகையில் இக்கடிதம் வெளியானது.

இப்பிரச்னை பற்றியும் கடிதத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை அரசு இஸ்ரவேலின் மொஸாட் ஏஜன்ஸியை ஆயுதப்படையினருக்குப் பயிற்சி அளிக்க அழைத்துள்ளது.

இஸ்ரவேலுடன் இலங்கை தொடர்பு ஏற்படுத்திக்கொண்டது, அணிசேரா இயக்கத்திலிருந்து விடுபட்டு, அமெரிக்க அணியில் இலங்கை சேர முயல்வதைக் காட்டுகின்றது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரவேல் நலன் காக்கும் நிலையம் இருப்பது புதினம் அல்ல. காரணம் இஸ்ரவேலின் வளர்ப்புத்தந்தை அமெரிக்காதான்.

தேசியத் தலைவனுக இருந்த ஜனதிபதி,இன்று சிங்கள இனவாதியாக மாறிவிட்டார். அவரது அண்மைக்காலப் பேச்சுக்களில் இருந்து இது புலனுகின்றது.

ஜனநாயக அமைப்பில் உரியகாலத்தில் தேர்தல் நடைபெருவிட்டால் இந்த நிலைதான் ஏற்படும்.

சர்வஜன வாக்கெடுப்பின்படி நாடாளுமன்றத்தின் ஆயுள் நீடிக்கப்பட்டது. ஜனதிபதிக்குச் சர்வ அதிகாரங்களும் இதனுல்கிடைத்தன. சட்டவாக்கம்,

நிறைவேற்று அதிகாரங்கள் எல்லாம் ஜனதிபதியிடம் உள்ளன

ஒருவரிடம் முழுஅதிகாரங்களும் குவிவது சர்வாதிகாரத்தைப் புலப்படுத்துகின்றது.

தான் ஓர் உண்மையான ஜனநாயகவாதி என்பதை பொதுத்தேர்தலிலும் சர்வஜன வாக்கெடுப்பிலும் தரு ஜெயவர்த்தன பேச்சுமூலம் எடுத்துக்காட்டினர்

ஜனநாயகத்தின் பேரால் வாக்குச் சீட்டுகளின் உதவியுடன் சர்வ அதிகாரங்களும் உள்ளவராக அவர் மாறிவிட்டார் என்பதை மக்கள் இப்போது உணர்ந்து கொண்டனர்.

ஆயுதப்படைகளின்பிரதம தளகர்த்தர் ஜனதிபதி. ஜனதிபதி ஒரு இனவாதியானல். ஆயுதப்படைகளும் இனவாதிகளாகவே மாறிவிடும்.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆட்களை கட்டு, மரணவிசாரணை இன்றி சடலங்களை எரிக்கும் அதிகாரம் ஆயுதபடையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆயுதப்படைகள் இப்படி சிறுபான்மையினரை அழிப்பது பயங்கரவாதம் இல்லையா?

உண்மையில்இது சட்டபூர்வமான பயங்கரவாதம்.

'தர்மிஷ்ட' நாட்டில் இடம்பெறும் 'அதர்ம' நடவடிக்கைகள் தான் மனிதத் தன்மையிற்ற அடக்குமுறைகள்.

ஆயுத படையினரிடம் இருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதநிலையில் ஆயுதவசதியற்ற மக்கள் உள்ளனர்

பயங்கரவாதம் எந்த அமைப்பில் வந்தாலும் ... பவர்கள் அதை முதலில் செயல்படுத்த வேண்டும்

கலிங்க யுத்தத்தில் உயிர் இழப்புக்கள் குறித்து அசோக மன்னன் கலங்கினன்.

யுத்தமே வேண்டாம் என்ருன் ஒற்றுமை, சமாதானம், அஹிம்சை ஆகியவற்றைப் போதித்தான் அசோகமன்னன்.

மொழி, இனம் ஆகியவற்றின் பேரால் போதுமான அளவு இரத்தம் இலங்கையில் சிந்தப்பட்டுவிட்டது.

ஜனதிபதியே இதனைக் கண்ணுல் கண்டுள்ளார்.

இந்தக் காட்டுமிராண்டித்தனத்துக்கு அவரால் முற்றுப்புள்ளிவைக்க முடியாதா?

இலங்கை அரசமைப்பு வரலாற்றைப்பார்த்தால் சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் சகல இனங்களும் ஒரு குடும்பம், ஒரு தேசம் என்று வாழ்ந்து வந்தன.

இன, மத, மொழி ரீதியிலான சட்டங்களும் அப்பொழுது இல்லை.

சுதந்திரத்துக்குப் பின்னர்தான் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் படிப்படியாக அதிக அரசியல் அதிகாரங்களை எடுத்துக்கொண்டனர்.

இரண்டு அரசமைப்புச் சட்டங்களை இயற்றி அவற்றைக் குடியரசு அரச்மைப்புச் சட்டங்கள் என்று பிரகடனப்படுத்தினர்.

சிறுபான்மை இனமக்களுக்குப் பாதகமான முறையில், சிங்கள பௌத்தர்களை ஆளும் இனமாகக் காட்டக்கூடிய முறையில் புதிய அரசமைப்புச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இந்த இரண்டு அரசமைப்புச் சட்டங்களும் தான் இனப்பிரிவினைக்கு வித்திட்டன. வினை விதைத்தவன் வினை அறுப்பான். அரசாங்கம் வினையை விதைத்தது ... அறுவடை செய்யவும் வேண்டும்

பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வேதாகம மறைப் போட்டி

உடுப்பிட்டி, ஏப்.16

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் கத்தோலிக்க மாணவர்களுக்கிடையே வேதாகம மறைப்போட்டி ஒன்றை யாழ்-மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் நடத்தவிருக்கின்றது

இந்த வேதாகம மறைப்போட்டி எதிர் வரும் ஜூன் மாதமளவில் நடத்தப்படும் என கத்தோலிக்க மாணவர்கள் கல்வி பயிலும் சகல பாடசாலைகளுக்கும் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. வின்சென்ட் தெரிவித்துள்ளார்.



**பொய்யாமொழி**

குறள்:

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு.

பொருள்:

காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்கா விட்டாலும் நாவையாவது காக்கவேண்டும்; காக்கத் தவறினுல் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

# மெய்ஞ்ஞான விளக்கமாக திகழும் கந்தபுராணம்

நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற கந்தபுராணப் படனப் பூர்த்தி விழா இன்று. அதையொட்டி இச்சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது.

கந்தபுராணம் படிப்பது யாழ்ப்பாண கலாசாரம் யாழ்ப்பாண கலாசாரத்தை கந்தப்புராண கலாசாரம் என்றும் சொல்வர்.

கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சிபுரத்தில் கந்தபுராணம்பாடியவர். அன்னரின் சமகாலத்தவரான காஞ்சி கணேசையர் இலங்கையில் கந்த புராணத்தை தொடக்கி வைத்தார். இது பண்டிதமணியின் கூற்று.

இப்பணி அன்று தொட்டு இன்று வரைக்கும் அந்நிய ஆட்சியின் இடர்களினுலும் தடைப்படாது தொடர்ந்து நடைபெற்று வருகிறது

புராண படனம் நடைபெறும் போது சில மரபுகள் பேணப்பட்டு வருகின்றன. புராண படனத்துக்குத் தலைவர் இறைவனே, என்னும் கோட்பாட்டுக்கு அமைய தலைவரின்றி இது நடைபெறும்.

புராணம் படிப்பவர் முதலில் காப்புச் சொல்ல உரை விரிக்க வந்தவரும் அவருடன் சேர்ந்துகாப்பு சொலவார். காப்புச் சொல்தல் நாள்தோறும் புராண படனம் முடிவுறும் வரை நடைபெறும்.

புராணம் படிப்பவரும், உரை விரிப்போரும் ஆரம்ப தீட்சையாவது பெற்றிருப்பார்கள். பாடலை ஒரு தடவைமுற்ருகப் படித்துவிட்டு இரண்டாவது தடவை

**வே. ந. சிவராஜா**
(யாழ். பல்கலைக்கழக பதிவாளர்)

உரை விரிப்பதற்கு ஏதுவாகப் பகுதி பகுதியாகப் பிரித்து வாசிப்பார்.

பாடல் எந்தத்தொனியில் எவ்வித மெய்ப்பாட்டு உணர்ச்சியுடன் படிக்கப் பெறுகிறதோ, இயன்றளவு அதே உணர்ச்சி மெய்ப்பாடு தோன்றும்படி மற்றவர் உரை சொல்வர்.

ஆறுமுகநாவலர் காலத்தில் இம்மரபு மறுமலர்ச்சி அடைந்தது நாவலர் உரைசொல்ல, அவர்களுடைய மருமகனர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை புராணம் படிக்க பக்தர்கள் கேட்டு இன்புற்றனர்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை எழுதிய தட்சகாண்ட உரை தனிச் சிறப்புடைறது. பாரம்பரியமாக வந்த புராணபடன விளக்கத்தைத் தழுவியது இவ்வுரை.

கந்தபுராணத்தின் ஒரு பகுதியான "அடிகுடி தேடுபடலம்" சிவராத்திரி தினத்தன்று பரவலாகப் படித்துப் பயன் சொல்லப்படுகிறது.

பதியென அழைக்கப்படும் சக்தியையும், பசுவாகிய தன்னையும், தனக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பையும் வினவி இத்தொடர்பில் இடம்பெறும் பாசம் என்பதை அறிந்து பதி, பசு, பாசம் மூன்றினையும் உணர்ந்து மனிதன் மேம்பாடடைய கந்தபுராணம் உதவும்.

கந்தபுராணம் தனிச் சமயம் சார்ந்த நூலாக இல்லாமல் உலகளாவிய பொதுச் சொத்தாக மெய்ஞ்ஞானவிளக்கமாகத் திகழ்கிறது.

## முன்மாதிரி காட்டும் வடபகுதிப் பெற்ருேர் அவர்களைப் பின்பற்றுமாறு கோருகிருர் பிரதி அமைச்சர்

அம்பாறை, ஏப் 16

'அம்பாறை மாவட்டத்தின் குடியேற்றக் கிராமங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் கல்வியில் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

ஆனால் ஏககாலத்தில் குடியேறிய பெரும்பான்மை இனத்தவர்கள் கல்வியில் முன்னேற்றம் கண்டிருக்கின்றனர். எமது பெற்றோரின் அசட்டையே இதற்குக் காரணம்.

இவ்வாறு பிரதி தபால் தந்தி தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறைத் தொகுதி எம். பியுமான ஜனப் எம்.ஏ. அப்துல் மஜீத் கவலை தெரிவித்தார்.

சம்மாந்துறைத் தொகுதியைச் சேர்ந்த ஐந்தாம் கிராம மக்களுக்கு வீட்டுத்தோட்ட நடுகைக்கென தென்னங் கன்றுகள் விநியோகிக்கும் வைபவம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

5ஆம் கொலனி வீரத்திடல் அல் ஹிதாயா வித்தியாலயத்தில் ஜனப் எம். நிஜாமுடீன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பிரதி அமைச்சர் ஜனப். அப்துல் மஜீத் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

'நாம் கல்வித்துறையில் முன்னேறுவதன் மூலமே அபிவிருத்திகளைக் காணலாம் ஆனல் எமது குடியேற்றகிராமங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர் பார்த்த அளவு கல்வியில் முன்னேற்றம் காண

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L 88**

பொருளியல் - திரு. கிருஷ்ணானந்தன்
வர்த்தகம் - திரு. லங்காதுரை
அளவையியல் - திரு. கேசவன்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
புவியியல் - திரு. குணராஜா

எமது நிறுவனத்தில் மட்டுமே A/Lக்குரிய சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றது.

**நொதேண் இன்ஸ்ரிரியூட்**
சுண்டுக்குளி.



# உதயன்

16 04 1986 புதன்கிழமை



**A/L 88**

தமிழ் - திரு. சரவணன்
அரசியல் - திரு. ம. நாப்
கிறிஸ்தவம் - திரு. யேசரட்ணம்
இந்து நாகரிகம் - திரு. ஐயர்
விவசாய விஞ்ஞானம் - திரு. மரியநாயகம்

எமது நிறுவனத்தில் மட்டுமே A/Lக்குரிய சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றது.

**நொதேண் இன்ஸ்ரிரியூட்**
சுண்டுக்குளி.


## வித்தாரம்

வருக, வருக முரளி யாரே! கண்டுகன நாள் புதுவருஷமும் விசேஷமுமாய் உம்மை எப்பிடியும் சந்திச்சாக வேண்டும் எண்டு தான் அந்தனை வேலையையும் விட்டு விட்டு வந்தேன்.

புதுவருஷத்தண்டே வந்து உம்மை ஒருக்காப் பாத்துவிட்டுப் போவம் எண்டா பனுஷிக்காரி விரும்பயில்லை.

இண்டைக்கு ஒருநாள் வீட்டிலை நிக்கிறியள். ஆகக் கிட்டடிச் சொந்தக்காரவீட்டை யாவது போகவேண்டாமே.

எல்லா 'கிசிட்டிக்' வேலையையும் என்னிட்டை விட்டிட்டு நான் என்ரை வேலையளைச் சரியாச் செய்ய முடியாமல் இருக்குது ... ... எண்டு ஒரு பக்கம் முணுமுணுக்குமாப் போலை புறுபுறுக்கவும் தொடங்கிவிட்டா.

உந்தப் பொம்பிளையளே உப்பிடித்தான். சின்ன விஷயத்தையும் பெரிசா எடுத்து நால் நிமிப்பினம். அதைவிடு..!

என்ன வருஷப்பிறப்புக்கு ஏதாவது விசேஷம் ...! தமிழனாய் பிறந்துவிட்டோம். நிலைமை ஒரு சிருக்குவந்த பிறகு தான் உதுகளை நினைக்கலாம்.

ஆனால் அங்காலை தென்னிலங்கைப் பக்கத்திலை வருஷப் பிறப்பு எண்டால் ஏதோ இந்திர விழா மாதிரித் தான்.

இரண்டு மூண்டு கிழமைக்கு முன்னமே கவுன்சது இது எண்டு பலகாரம், பட்சணம் எல்லாம் செய்யத் தொடங்கி விடுவினம்.

றபான், வஞ்சகர், எல்லே, கிளித்தட்டு அப்பிடி எண்டு எக்கச்சக்கம்.

வருஷம் பிறந்தால் திக்குத் திசை பாத்து, சுபநேரம் பாத்து, அடுப்பு மூட்டி பாற்சோறு பொங்குவது தொடக்கம், வயது போன தாத்தாவைக் கொண்டு எண்ணெய் தேய்ச்சுத் தலைக்குத் தண்ணி வாத்துறது வரையிலை எல்லாம் சாத்திர முறைப்படி தான் செய்வினம்.

அவைக்கு அப்பிடிக் கொண்டாடுறதுக்கு சகல வசதியும், மன நிம்மதியும் இருக்கு! எங்களுக்கு அப்பிடியே!

வலிகாமம் வடக்குப் பகுதியிலை ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் புதுவருஷத்தண்டே உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டிருக்க வேண்டியதாப் போச்சு.

சாமி அறைக்குள்ளை நின்று கும்பிட்டுக் கொண்டிருந்த போதே கூரையைத் துளைச்சுக் கொண்டு குண்டு துளைச்சு இரண்டொரு பேருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் கேள்வி.

தெற்கிலை குதூகலக் கொண்டாட்டம்; வடக்கிலை உயிருக்குத் திண்டாட்டம்.

நிலைமை இப்படி இருந்த போதிலும், சிங்கள அரசியல் வாதியள் இந்து - சிங்கள புதுவருட பாரம்பரியங்களை ஒப்பிட்டுப் பேசாமல் இருக்கையில்லை.

அவை இஞ்சை நேரிலை வந்து பாத்தினம் எண்டா அப்பிடிப் பேசமாட்டினம்.

எங்கடை அச்சாணியார் புது வருஷத்துக்கு முதல்நாள் ரி. வி யிலை பேட்டி குடுக்கையிக்கை புது வருஷத்தை நாட்டின்ரை தேசியக் கொண்டாட்டம் எண்டு வருணித்தார்.

பௌத்தர்கள் - சிங்களவர்கள், இந்துக்கள் - தமிழர்கள் அதாவது நாடு முழுவதிலும் வாழும் மக்களின் தேசிய விழா எண்டு சொன்னார்.

அவையின்ரை தேசியம் உந்த மட்டிலை தான்! பாத்தியே!!

கொண்டோடி

# புதுவருடத்தன்று ஹெலிக்கொப்டர் தாக்குதல்

## வலி வடக்கில் பதற்றம்

பலாலி, ஏப்ரல் 16

இரண்டு நாள் இடைவெளிக்குப் பின்னர் புதுவருடத் தினத்தன்று பலாலி இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதிகளில் மீண்டும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் ஒருமணி நேரம் நீடித்த இந்தத் தாக்குதல்களினால் இருவர் படுகாயமடைந்தனர். மூவர் காயமடைந்தனர்.

காலை 8 10 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் தையிட்டி, மயிலிட்டி, கட்டுவன், வயாவிளான் பகுதிகளில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

படுகாயமடைந்தவர்களுள் ஒருவரான வைர வேற்பிள்ளை சதிராசிப் பிள்ளை (69 வயது) என்ற வயோதிப மாது யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருக்கிறார்

செல்வி திருநாவுக்கரசு இந்திரை (வயது 17) என்ற இளம்பெண் தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இவர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஜீ சீ ஈ. (சாதாரண) தர வகுப்பில் கல்வி பயிலுபவர்.

புதுவருடப் பொங்கலை முடித்து சாமி அறையில் படையலுக்கு ஆயத்தமாகும்போது வீட்டுக் கூரையைத் துளைத்து வந்த குண்டுக்கு இவர் இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது தொடையில் காயம் ஏற்பட்டிருக்கிறது.

படுகாயமடைந்த இருவரும் இருந்த வீடு ஹெலிக்கொப்டர் தாக்குதலினால் பலத்த சேதம் அடைந்திருக்கிறது

ஹெலிக்கொப்டர் தாக்குதல் தொடங்கியதை அடுத்து அப்பகுதி ஆலயங்களில் புத்தாண்டுப் பூஜைகளில் ஈடுபட்டிருந்தவர்களும், பொங்கிக்கொண்டிருந்தவர்களும் அவற்றை அரைவாசியில்விட்டு விட்டு பீதிகொண்டு ஓடினார்கள்.

விமான நிலையத்தில் வந்து இறங்கிச் சென்றதாகக் கூறப்படும் ஒரு விமானத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலேயே இந்த ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

விமானம் புறப்பட்டுச் சென்றதும் ஹெலிக்கொப்டர் தாக்குதல் உடன் நிறுத்தப்பட்டது

## மேலும் 15 குடும்பங்கள் இடம் பெயர்ந்தன

காங்கேசன்துறை, ஏப். 16

பலாலி விமான நிலைய சுற்றுடல் பகுதியில் தொடர்ந்து நிலவும் பதற்றம் காரணமாக ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த பதினைந்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் புத்தாண்டுதினத்தில் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து சென்றனர்.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் 200 க்கு மேற்பட்ட குடும்பங்கள் ஏற்கனவே வீடுகளை விட்டு உடைமைகளுடன் வெளியேறியிருந்தனர்.

புதுவருட தினத்தில் தையிட்டி, ஆதிமயிலிட்டி, கட்டுவன் பகுதிகளில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஹெலிக்கொப்டர் சூடு காரணமாக பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது

## குருநகரில் கத்திக்குத்து

நல்லூர், ஏப். 16

ரி. வி. படம் பார்க்கச் சென்றவர் பழைய பகைமை காரணமாக கத்திக்குத்துக்கு இலக்கானார்.

புதுவருட தினத்தன்று குருநகர் வீடமைப்பு திட்டத்தில் படம் பார்க்க சென்ற தேவதாஸ் சேகர் (வயது 22) என்ற இளைஞர் கத்தியால் குத்தப்பட்டார்.

தலையில் காயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்

## லிபியா மீது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்திருக்கிறார்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை பற்றி சரியான தகவல்கள் ஏதும் அறிவிக்கப்படவில்லை.

சுமார் நூறுபேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சேதமடைந்த கட்டடங்களுக்கு நடுவில் தப்பிப் பிழைத்தவர்களை தேடும் நடவடிக்கை மும்முரப்படுத்தப்பட்டிருக்கிறது

லிபியாவுக்கு எதிரான இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தும்படி அமெரிக்காவுக்கு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அணிசேரா நாடுகள் இயக்க அமைச்சர்கள் மட்டக்குழு இவ் வேண்டுகோளை டில்லியில் வைத்து விடுத்தது.

நேற்று இடம்பெற்ற தாக்குதலால் லிபியாவுக்கு ஏற்பட்ட உயிர், உடைமைச்சேதங்களுக்கு நட்டஈடு வழங்கும் படியும் அணிசேரா நாடுகள் இயக்கம் அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

இத்தாக்குதல் பற்றி விவாதிக்க ஐ.நா. பந்தோபஸ்து சபையைக் கூட்டும் படியும் வேண்டு கோள் விடுக்கப்பட்டது.

நேட்டோ கூட்டணியான பிரிட்டனின் உதவியுடன் இத்தாக்குதலை அமெரிக்கா நடத்தியது.

(முன்னர் வந்த செய்தி மூன்றும் பக்கத்தில்).

## பாண்டிருப்பில் இளைஞன் சுட்டுக்கொலை

கல்முனை, ஏப். 16

புதுவருடப் பிறப்பு அன்று பாண்டிருப்புக் கிராமத்தில் பொலீஸ் கமாண்டோக்கள் தேடுதல் நடத்திய சமயம் 22 வயது இளைஞன் ஒருவர் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்.

இளைஞனின் சடலம் கமாண்டோக்களினால் கொண்டு செல்லப்பட்டது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

புத்தாண்டு தினத்தன்று பாண்டிருப்புக் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வயோதிபர், இளைஞர்கள் சீட்டு விளையாடிக் கொண்டு இருந்தனர்

அச்சமயம் பொலீஸ் கமாண்டோக்கள் தேடுதல் நடத்த அங்கு போய் இறங்கினர்.

இவர்களைக் கண்டவுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தவர்கள் பதறி அடித்துக்கொண்டு ஓடத் தொடங்கினர்.

கமாண்டோக்களும் அவர்களைத் துரத்தத் தொடங்கினராம். அச்சமயமே குலசேகரம் பிரபாகரன் என்ற இளைஞர் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்.

பின்னர் கமாண்டோக்கள் பிரேதத்தை தம்முடன் எடுத்துச் சென்றனர்.

## காங்கே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைப்பு நடத்தப்பட்டது

வீதிகளில் வாகன நடமாட்டம் எதுவும் காணப்படவில்லை. வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. பஸ், மினிபஸ் சேவைகளும் நிறுத்தப்பட்டன.

காலை 8 மணியளவில் பஸ் சேவைகள் திடீரென நின்றதால் பிரயாணிகள் பெரும் சிரமம் அடைந்தனர்.

கட்டுவனைச் சேர்ந்த கல் உடைக்கும் தொழிற்சாலை வைத்திருந்த பொன்னுத்துரை சதாசிவம் என்பவர் நேற்றிரவு கட்டுக் கொல்லப்பட்டமையே இந்த ஹர்த்தால் நடவடிக்கைக்குக் காரணமெனக் கூறப்படுகிறது

தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம் பகுதிகள் வீதித் தடைகளும் காணப்பட்டன.

## சிப்பாய்களுடன் சென்றவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

### கும்புறுப்பிட்டியில் சம்பவம்

திருகோணமலை, ஏப்ரல் 16

புத்தாண்டு காலை திருகோணமலைத் தொகுதியில் கும்புறுபிட்டிக் கிராமத்தில் நடந்ததாகக் கூறப்படும் நேரடி மோதலில் சிப்பாய்களுடன் சென்ற சிவிலியன் ஒருவர் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்.

போராளிகளில் மூவர் மரணமாகி இருக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

சிப்பாய்களுடன் சென்ற சின்னையா நந்தக்குமார் (வயது 23) என்ற நபரே துப்பாக்கிக்குண்டு தாக்கி மரணமானார்.

இந்த நபரின் மரண விசாரணை திருமலை பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா முன்னிலையில் நடைபெற்றது.

தேடுதல் நடத்திய சிப்பாய்களில் ஒருவரான சார்ஜன்ட் ராஜன் மஹிபால தனது சாட்சியத்தில் சொன்னதாவது;

திங்கள் காலை 5 40 மணியளவில் என்னுடன் சேர்ந்து 24 சிப்பாய்கள் தேடுதல் நடத்த நடந்து சென்று கொண்டிருந்தோம்.

அச்சமயம் எமக்கு எதிர்ப்பக்கமாக இருந்து மாட்டு வண்டி ஒன்று வந்து கொண்டிருந்தது. வண்டியின் பின்னால் 15 பேர் வரை வந்துகொண்டிருந்தார்கள்.

அவர்கள் எம்மைநோக்கிச் சுடத்தொடங்கினார்கள். நாமும் திருப்பிச் சுட்டோம்.

எம்முடன் கூடஅழைத்துச்செல்லப்பட்ட காலஞ்சென்றவர் துப்பாக்கிச் சூடு தாக்கி இறந்து விட்டார்.

தீவிரவாதிகளிலும் மூன்று பேர் நிலத்தில் விழுந்துகிடந்தனர். ஏனைய தீவிரவாதிகள் இறந்த மூன்று தீவிரவாதிகளையும் தூக்கிக் கொண்டு தப்பி ஓடினர்.

இப்படி சார்ஜன்ட் மஹிபால சாட்சியமளித்தார்.

இறந்த நபரின் மனைவி தேவகி சாட்சியம் அளிக்கையில் சொன்னதாவது;

இறந்தவர் முதல்நாள் பசளை வாங்கச் சென்று இருந்தார். அவரை ஆயுதப்படையினர் கைதுசெய்தனர் என்று பின்னர் கேள்விப்பட்டேன். மறுநாள் எனது கணவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கேள்விப்பட்டேன்" — என்று சொன்னார்.

கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

## கோஷ்டி மோதலில் மூவருக்கு கத்தி வெட்டு

நல்லூர், ஏப்ரல். 16

புதுவருட தினத்தன்று ஏழாலையில் கோஷ்டி மோதல் ஒன்றில் மூவர் கத்தி வெட்டுக்கிலக்காகினர்.

இளைஞர் கோஷ்டி ஒன்று இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதாகவும் தெரியவருகிறது.

காயமடைந்த மூவரும் வருமாறு:-

1 சின்னப்பு தம்பிராசா (38 வயது) இவருக்கு கழுத்தில் வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது

2. செல்லப்பா இராஜேந்திரம் (28 வயது) ஏழாலை வாசி. இவருக்கு முதுகிலும் கையிலும் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

3. முருகன் செல்வரத்தினம் (23 வயது) இவருக்கு தலையில் வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது.

## வாகனேரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனர் என்று! —

இவர்கள் பொலநறுவை ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் பிந்தி வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது கோஷ்டியினர் அக்கடையின் சீல் வைத்த பகுதியை உடைத்துப் புதிய பூட்டு ஒன்றைப் போட்டுக் காவல் புரிந்தனர்.

இவ்விடயம் சம்பந்தமாக நல்லூருக்கு அருகில் திங்கள் இரவு மோதல் ஒன்று உருவானது. சுமார் 20 நிமிட நேரம் துப்பாக்கிச் சமர் நீடித்தது.

இந்த மோதலில் உயிர் இழந்த இருவரின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் நேற்று அதிகாலை திருநெல்வேலிச் சந்தைப் பகுதிக்குச் சென்று சந்தையைக் கலைத்து, கடையடைப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனால் சந்தையில் ... பட்டு, கடைகள் மூடப்பட்டன.

## மீனவர் மீது தாக்குதல்

மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றவர் கடற்படையினரால் தாக்கப்பட்டு சுடப்பட்டார்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

கடந்த 11ஆந் திகதி குருநகரிலிருந்து நான்கு மீனவர்கள் தொழிலுக்காக பேசாலை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

சனிக்கிழமை 12ஆந் திகதி இரவு 9 மணியளவில் கடலில் இவர்களை வழிமறித்த கடற்படையினர் படகு ஓட்டுபவரைத்தாக்கியதாகவும்!.

படகில் இருந்த சில பொருட்களையும் கடலில் தூக்கி வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால் இராயப்பு பிரான்சிஸ் (42 வயது) என்பவர் இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்தார்.

படகின் ... சேதமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## சட்டவிரோத குழாய் நீர் பாவனைக்கு கடும் நடவடிக்கை

### மாநகர ஆணையாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

யாழ் மாநகரசபையின் நகர நீர் விநியோகக் குழாய்களில் இருந்து சட்ட விரோதமாகவும், தான்தோன்றித்தனமாகவும் பிரத்தியேக தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பவர்களுக்கு எதிராக எதிர்வரும் 28ஆம் திகதிக்குப் பின்னர் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநகரசபை ஆணையாளர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படி எச்சரிக்கை செய்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நகர நீர் விநியோகத் திட்டம் பிரத்தியேக சேவை இணைப்பைக்கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்படவில்லை. சாதாரண மக்களுக்கு என வீதிக் குழாய் அமைப்புக்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டன. ஆனால்காலப்போக்கில் ஆயிரம் தனித் தொடர்புகள் வழங்கப்பட்டன. இது சாதாரண மக்களை பாதிக்கவே செய்தன.

சூழ்நிலையைப் பயன்படுத்தி அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அங்கீகாரமற்ற சேவைத் தொடர்புகளினால் பாரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

இதனால் தெருக்குழாயில் நீர்விநியோகம் பெறுபவர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வசதி படைத்தவர்கள் செய்யும் இச்செயலைத் தடுக்கக்கூடிய நிலையில் நாம் இல்லை அதற்காக நாம் மௌனமாக இருக்கவும் முடியாது.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களே கிளர்ந்து செயற்பட வேண்டும்.

அங்கீகாரமைப்பு நீர் விநியோகம் பெறுபவர்கள் அவற்றை உடன் துண்டிக்க வேண்டும் தவறின் அப்பகுதிக்கான நீர் விநியோகம் முற்றாகவே துண்டிக்கநேரிடும்.

—இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மீனவர் கைது!

பருத்தித்துறை, ஏப் 16

நாகர்கோவில் கடற்கரையோரமாக மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் கடற்படையினரால் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 30 மணிக்குக் கைது செய்யப்பட்டார்.

நாகர்கோவில் கடற்கரையோரமாகப் பலர் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். திடீரென உள்ளகத்தில் வந்த கடற்படையினர் இராமநாதன் பத்மநாதன் (வயது 30) என்ற இளைஞரைக் கைது செய்தனர்.

ஏனைய மீனவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அவர்கள் வள்ளங்களை விட்டுக் கடலில் பாய்ந்து தப்பிக் கொண்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரின் உறவினர்கள் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி கே கணேசலிங்கத்துக்கு இது குறித்துப் புகார் செய்துள்ளார்கள்.

## திருக்குள திருப்பணி

புங்குடுதீவு, ஏப். 16

புங்குடுதீவு பாணவிடை சிவன் கோவில் திருக்குளத் திருப்பணி வேலைகள் 40 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரஸ்தாப ஆலய பரிபாலன சபைத் தலைவர் சட்டத்தரணி எஸ் கே மகேந்திரன் தலைமையில் இத்திருப்பணி வேலைகளைத் தொழிலதிபர் திரு கே சோமசுந்தரம் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

## குடிசைகள் எரிப்பு

பலாலி, ஏப்ரல் 16

கடந்த 13 ஆம் திகதி தொண்டமானாறு இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள வளலாய்க் கிராமத்தில் மூன்று குடிசைகள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

அதிஷ்டவசமாக அப்போது குடிசைகளில் எவரும் இருக்காமையால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.

சிருடையினரே குடிசைகளை எரித்ததாகச் சொல்லப்படுகிறது.

## தமிழ்ச் சங்கத்திற்கு பத்துக் கோடி ரூபா

### தமிழ்நாடு அரசு வழங்கியது

மதுரை, ஏப்ரல் 15

சங்கம் வளர்த்த மதுரையில் கடந்த புத்தாண்டு தினத்தன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட உலக தமிழ்ச் சங்கத்துக்கு தமிழ்நாடு அரசு பத்துக் கோடி ரூபாவை நன்கொடையாக வழங்கியது.

இத்தகவலை தமிழக முதல் அமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

உலகத் தமிழ்ச் சங்கத்தைச் செயல்படுத்தும் பணிகளுக்கு இப்பணம் செலவிடப்பட உள்ளது.

தமிழ் வளர்ச்சிக்கான கருமங்களில் உலகளாவிய பணிகளை மேற்கொள்ளும் திட்டங்களும் செயற்படுத்தப்படவுள்ளன.

## கல்முனையில் 6 தமிழர் கைது!

கல்முனை, ஏப். 16

கல்முனை 3 ஆம் குறிச்சியில் புத்தாண்டு அன்று 6 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

## கைதடியில் கோயில் கொள்ளை

கைதடி, ஏப். 16

கைதடியில் புதுவருடத்தினத்தன்று நள்ளிரவு இரு கோயில்களில் கொள்ளை முயற்சியும், கொள்ளையும் இடம்பெற்றன.

கைதடி இணுங்கித் தோட்ட கந்தசாமி கோயிலின் ஓடு பிரித்து திருடர்கள் உட்சென்றனர். வெள்ளியினாலான விநாயகரின் முகவசம், தட்டங்கள், திருவாசிகள், உண்டியல் பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அதே இரவு கைதடி நாச்சிமார் கோவிலின் கதவுகளை உடைத்துக் கொண்டு உட்சென்ற திருடர்கள் உள்ளே கொள்ளையிட எதுவும் இருக்காததால் வெறுங்கையுடன் திரும்பினார்கள்.

## ஜனாதிபதி இனவாதி....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இது என்கிறது அரசு அதற்காக இஸ்ரவேலின் உதவியை இலங்கைநாடியுள்ளது

பயங்கரவாதத்தில் இருந்து பிறந்ததுதான் இஸ்ரவேல்

தேசம், இனம் என்பது தத்துவார்த்தமானது. தேசம் என்பது உள்ளத்தில் இருந்து எழும் உணர்வே

அந்த உணர்வு,

உண்மையான அரசியல் தலைவர்களாக செயலாகப் பரிணமிக்கிறது என்று சொல்வார்கள்.

பாகிஸ்தான் அப்படி உருவான நாடுதான்,

தத்துவமேதை கவிஞர் அல்லாமா இக்பாலின் உள்ளத்தில் கனவாக எழுந்தது. முகமது அலி ஜின்னாவினால் நனவாக்கப்பட்டது

இன்று தேவைப்படுவது தேசியத் தலைவனுக்குரிய தன்மை அது ஒன்றினால்தான் இலங்கை பிளவுபடுவதைத் தடுக்க முடியும்! இலங்கையை ஒரு நாடாக வைக்கவும் முடியும்.

எழுதியவர்:
முகம்மது யூசுப்
பாகிஸ்தான்.

## முன்மாதிரி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை அற்றவர்களாக பெற்றோர் இருந்து வரும் நிலை தொடரக் கூடாது.

இந்தவகையில் வடபகுதிப் பெற்றோரை எம்மவர்கள் முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும்.

தமது உழைப்பிலும், வருமானத்திலும் முதற் பங்கை தமது பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்காக வடபகுதிப் பெற்றோர் ஒதுக்குகின்றனரென்றால் அவர்கள் காட்டும் அக்கறையை நாம் உணரவேண்டும்- இப்படி அவர் சொன்னார்.


### உடன் தேவை

கிரைண்டிங் மில்லில் 5 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான டிரைவர் உடனே தேவை தங்குமிட வசதி உண்டு நேரில் வரவும்:
Manju Grinding Mill,
Puliankoodal Junction,
Kayts.



அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15. 8 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வெளியிட்ட திகதி 16 - 04 - 86.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org